## 54. கழுகுமலைபாதி கந்தகிரிபாதி.

*கலிவிருத்தம்.*

*தக்கராகம். பண் - கொல்லிக்கௌவாணம்.*

**உ**லக வெம்மைக் கடல்கடக்கு முறுதியினைத் தாராய்
கலகமிகந் தவர்கருதுங் கழுகுமலை முருகா
விலகலற்ற விருத்தியெற்கு விரைவிலினி தளியாய்
பலகவிஞர் பரசுகந்த பருவதத்துப் பரமே. 1

**வ**ருதாவெல் லாங்களைதி மனதினினைப் போர்க்கும்
கருதார்க்குங் களிப்புதவுங் கழுகுமலை முருகா
ஒருதாழ்வுஞ் சொலவிசையா வுவப்பிலெனை வையாய்
கிருதார்த்த ருள்குகந்த கிரியிருக்குங் கிளியே. 2

**அ**ன்றுசொன்ன படியெனைவந் தாண்டுகொள வேண்டும்
கன்றுதலில் லார்குரங்குங் கழுகுமலை முருகா
என்றுமெனைத் திருவடிக்க ணிருத்தியிட வேண்டும்
குன்றுதலில் லாதகந்த குவடமருங் குருந்தே. 3

**தா**ட்டாம ரைத்திருவிற் றங்கவெனை வையாய்
காட்டார்வ முனிவருள்குங் கழுகுமலை முருகா
வீட்டாசை யேற்கொளுதி விரைவினில்வல் லார்க்கும்
மாட்டார்க்கு நல்லகந்த மலையிருக்கு மணியே. 4

**நா**தநிலை ஞாங்கரெனை நன்கிருத்தி யாளாய்
காதலொடு நானேத்துங் கழுகுமலை முருகா
பாதகமெல் லாமுருக்கும் பரிவிலெனை வையாய்
மாதவர்கள் வணங்குகந்த மலையிருக்கு மணியே. 5

**எ**ள்ளுதலில் லாநெறியி லெனையிருத்தி யருளாய்
கள்ளுதலுள் ளார்மறந்த கழுகுமலை முருகா
துள்ளுதலில் லாதமதி துலங்கவெனக் களியாய்
பொள்ளுதல்கொள் ளாதகந்த பொருப்பிருக்கும் பொருளே. 6

**தி**டம்பிறங்கு தெருளிலெனைத் தினமுநனி வையாய்
கடம்புமலர் கமழ்வளங்கொள் கழுகுமலை முருகா
விடம்பொருவென் மலமவித்துன் விரையடியைத் தாராய்
தடம்பொழில்கொள் கந்தகிரி தனிலிருக்குந் தகையே. 7

**நா**ன்பாடு பாட்டைநவில் பவர்க்குநல நல்காய்
கான்பாடு வண்டறையுங் கழுகுமலை முருகா
தேன்பாகு கண்டெனவந் தென்னுணனி சேராய்
மேன்பாடு மல்குகந்த வெற்பிருக்கும் வேளே. 8

**எ**னைத்தள்ளி னாலுமெனை நம்பினவர்த் தள்ளேல்
கனைத்தண்டை சிலம்பவருங் கழுகுமலை முருகா
தினைத்தனையு நீங்காத திருவிலெனை வையாய்
நினைத்தவர நல்குகந்த கிரிக்கருணை நிதியே. 9

8-ல் "நான்பாடு பாட்டை நவில் பவர்க்கு நல நல்காய்" எனவும், இந்த 9-ல் "எனைத்தள்ளினாலுமெனை நம்பினவர்த் தள்ளேல்" எனவும் அருளிச் செய்தமையை நோக்க அடிகளுடைய காருண்ணிய நீர்மை நன்கு புலனாகின்ற தன்றோ. ஆவதேல், நம்பாதார்க் குறுபயன் யாது கூறலாங்கொல்? உணர்வா ருணர்க.

**கு**ருப்புகழர் விரும்புமருட் கூத்தினென்னை யாட்டாய்
கருப்புகழர் காணரிய கழுகுமலை முருகா
அருப்புகழர் நாடறிவி லனவரத மெனைவை
திருப்புகழர் புகழ்ந்தகந்த சிகரியுறை சிவமே. 10

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 3ஆம் தேதி மங்களவாரம்.